ISSN 0971 - 8362
THITTAM (YOJANA - TAMIL)

Published on : 1st Week of Every Month
Posted on : 02nd April 2018

Registrar of Newspapers for India No.24495/74
"Registration" No.TN/CC(S)DN//566/18-20/2018-20
WPP No.: TN/PMG (CCR) WPP No. 150/2018-20


# புதிய நூல்களின் அணிவகுப்பு

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்




வெளியீட்டுப்பிரிவு
A Wing இராஜாஜி பவன்
பெசன்ட் நகர்
சென்னை -600 090
இந்த முகவரியில் உள்ள
காட்சிக்கூடத்திற்கு வாருங்கள்

To buy online visit: **www.bharatkosh.gov.in**

For placing orders, please contact: Ph : 011-24367260, 24365609, e-mail: businesswng@gmail.com

**Publications Division**
Ministry of Information & Broadcasting, Government of India
Soochna Bhawan, CGO Complex, Lodhi Road, New Delhi-110003
website: www.publicationsdivision.nic.in

@ DPD_India
www.facebook.com/publicationsdivision
www.facebook.com/yojanaJournal

Published by Shri SANJAY GHOSH, Editor/Assistant Director on behalf of DG, Publications Division, Ministry of Information and Broadcasting, Govt of India.

and Printed by. S. Shanmuganathan at PAVAI PRINTERS (P) LTD., No.16 (142), Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014. Ph : 28482441 Published at 'A' wing Ground Floor, Rajaji Bhavan, Chennai - 600 090. Ph : 24917673. Chief Editor : Deepika Kachhal, Assistant Director: Sanjay Ghosh.



ISSN 0971 - 8362

# திட்டம்

ஏப்ரல் 2018 வளர்ச்சிக்கான மாத இதழ் ₹ 22



## வட கிழக்கு மாநிலங்கள்

தேசிய நீரோட்டத்தில் வட கிழக்கு
எஸ்.ஜே.சிரு

வட கிழக்கில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி
சி.கே.தாஸ்

வட கிழக்கு மாநிலங்களின் பொருளாதாரம்
மஞ்சுளா வாத்வா

மூங்கில் செயல்திட்ட இயக்கம்
நிரேந்திர தேவ்

வட கிழக்கில் திறன்மேம்பாடு
இபு சஞ்சீப் கர்க்

செயற்கை அறிவுத்திறனால் இந்தியாவின் வளர்ச்சி!
டாக்டர். ஆவிக் சர்க்கார்

சிறப்புக் கட்டுரை

வட கிழக்கில் ஆளுகைசார் சவால்கள்
நரேஷ் சந்திர சக்சேனா

## வளர்ச்சிப்பாதை

சர்வதேசப் பெண்கள் தினத்தை ஒட்டியும், பெண்குழந்தைகளைப் பாதுகாப்போம் - பெண் குழந்தைகளைப்படிக்கவைப்போம் (Beti Bachao Beti Padhao - BBBP) திட்டம் இந்தியா முழுவதும் உள்ள 640 மாவட்டங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டிருப்பதை ஒட்டியும், தேசிய ஊட்ட உணவுத் திட்டத்தை மார்ச் 8, 2018 அன்று இராஜஸ்தானில் ஜுன்ஜுனூவில் நடைபெற்ற மாபெரும் விழாவில் பிரதமர் ஆரம்பித்து வைத்தார். சமுதாயத்தைத் திறம்பட ஈடுபடுத்துவது, கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையின் பாலினத்தைக் கண்டறிவதை தடைசெய்யும் சட்டத்தை (Preconception Prenatal Diagnosis Techniques Act - PC & PNDT Act) அமலாக்குவது, பெண் குழந்தைகளுக்கான கல்வியை அளிப்பது ஆகிய தளங்களில் திறம்பட செயலாற்றிய 10 மாவட்டங்களுக்கு பிரதமர் விருதுகளை வழங்கினார்.




ஆண்களைப் போலவே பெண்களும் தரமான கல்வியைப் பெறுவதற்கான முக்கியத்துவத்தை பிரதமர் வலியுறுத்தினார். பல்வேறு துறைகளிலும் பெண்கள் சிறப்புறச் செயல்பட்டு தங்களுடைய தேசத்திற்கு பெருமிதத்தையும், மகிமையையும் கொண்டுவந்து சேர்த்துவருகிறார்கள் என்று, பெண் குழந்தை ஒரு சுமையல்ல என்று வலியுறுத்தும் விதத்தில் பிரதமர் தெரிவித்தார். பெண்குழந்தைகளைப் பாதுகாப்போம் - பெண் குழந்தைகளைப் படிக்கவைப்போம் (Beti Bachao Beti Padhao - BBBP) திட்டத்தின் மூன்றாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் விதமாக மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட புதுமையான முயற்சிகள் பற்றிய நிழற்படப் பயணப்புத்தகத்தை பிரதமர் வெளியிட்டார்.




பெண்குழந்தைகளைப் பாதுகாப்போம் - பெண் குழந்தைகளைப் படிக்கவைப்போம் (Beti Bachao Beti Padhao - BBBP) திட்டம் இராஜஸ்தானில் அறிமுகம் செய்யப்பட்ட 2015 ஜனவரி மாதத்திற்கு பிறகு பிறந்த 200 பெண் குழந்தைகளுடன் பிரதமர் உரையாடினார். அப்போது அந்தப் பெண்குழந்தைகளின் தாய்மார்களும் உடன் இருந்தனர். சுகாதார மேலாண்மைத் தகவல் அமைப்பின் (HMIS) தரவுகளின்படி, பிறப்பின் போது காணப்படும் பாலின விகிதத்தில் வளர்ச்சி தென்படுகிறது. இலக்கை எட்டுவதற்காக மாநிலங்களும், மாவட்டங்களும் மேற்கொள்ளும் ஆர்வமிக்க முயற்சிகள், ஊக்கமளிக்கும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. இதன் விளைவாக, 2014-15இல் 918 ஆக இருந்த பிறப்பின் போதான பாலின விகிதம் (SRB), 2016-17இல் 926ஆக அதிகரித்துள்ளது. இந்த வெற்றி தந்திருக்கும் ஊக்கத்தினால், இந்தத்திட்டத்தை இந்தியா முழுமைக்கும் விரிவுபடுத்தி செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. பெண்குழந்தைகளைப் பாதுகாப்போம் - பெண் குழந்தைகளைப் படிக்கவைப்போம் (Beti Bachao Beti Padhao - BBBP) எனும் திட்டத்திற்கு 2017 - 2018 முதல் 2019-2020 வரையான மொத்த ஒதுக்கீடு ரூ.1132.5 கோடியாகும்.

## ‘இந்தியா 2018’ வெளியிடப்பட்டது



வெளியீட்டுப்பிரிவின் மதிப்புமிக்க வெளியீடான “இந்தியா 2018” / “பாரத் 2018” ஆங்கிலம்/இந்தி குறிப்புதவி ஆண்டுப்புத்தகங்களை மத்தியதகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் மாண்புமிகு ஸ்மிதி சுபின் இராணி அவர்கள் பிப்ரவரி 27, 2018 அன்று வெளியிட்டார். இந்த நூலின் மின்னணு வடிவமும் இதனுடன் சேர்த்து வெளியிடப்பட்டது. தகவல்கள் நிறைந்திருக்கும் தொகுப்பாக ஆண்டுதோறும் வெளியிடப்படும் பார்வை நூலான ‘இந்தியா 2018’, 62ஆவது ஆண்டு வெளியீடாக வெளிவந்துள்ளது. ஊரகம் முதல் நகரங்கள் வரை, தொழிற்சாலை முதல் உள்கட்டமைப்பு வரை, அறிவியல் தொழில்நுட்பம் முதல் மனிதவள மேம்பாடு வரை, கலை பண்பாடு, கொள்கை, பொருளாதாரம், சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி, மக்கள்தொடர்பு என தேச வளர்ச்சி பற்றிய அனைத்துக் கூறுகளையும் இந்த நூல் உள்ளடக்கியிருக்கிறது. இந்த ஆண்டுப்புத்தகம் அரசாங்கத்தின் முன்னோடித்திட்டங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்குகிறது. இந்த ஆண்டின் முக்கியமான நடப்புகள், இந்திய மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் பற்றிய புள்ளிவிவரங்கள் ஆகியவற்றை இந்தப் புத்தகம் வழங்குகிறது.

மிகப்பரவலாகப் பயன்படுத்திக்கொள்ளப்படும் விதத்தில் மின்நூலும் வெளியிடப்பட்டுள்ளது. பலகைக்கணினிகள் (Tablets), மின்நூல் வாசிப்புக்கருவிகள் (e Readers), சீர்மிகு கைபேசிகள் (Smart Phones), கணினிகள் ஆகியவற்றின் மூலம் இந்த மின் நூலைப் படிக்கமுடியும். தொழில்நுட்ப ரீதியாக மிகச்சிறந்த உலகத்தரத்தில் இந்த நூல் அமைந்துள்ளது. அச்சில் வெளிவந்துள்ள அதே நூல் மின்னணு வடிவிலும் வெளியிடப்பட்டுள்ளது. மீத்தொகுப்புகள் (Hyperlinks), புத்தக அடையாளக்குறி (Book Marking) முன்னிலைப்படுத்தித் தெரிவித்தல் (Highlighting), இடைவினைகள் (interactivity) போன்ற படிப்பவர்களுக்குத் தோழமையான அம்சங்கள் பலவற்றை மின்நூல் கொண்டுள்ளது.




இணையத்தில் அடிக்கடி தகவல்களைத் தேடும் ஆய்வாளர்கள், மாணவர்கள் போன்றவர்களுக்கு இணையப்பதிப்பு உதவிகரமாக இருக்கும் என்று இந்த விழாவின் போது, திருமதி. ஸ்மிதி சுபின் இராணி கூறினார்.

அச்சிடப்பட்ட புத்தகத்தின் விலை ரூ.350/- இந்த நூல் நாடு முழுவதுமுள்ள வெளியீட்டுத்துறையின் 8 விற்பனை மையங்கள், 3 மண்டல அலுவகங்களில் விற்பனைக்குக் கிடைக்கும். பாரத்கோஷ் இணையதள நுழைவாயிலின் மூலம் இணையத்தின் வழியாகவும் இந்த நூல் விற்பனை செய்யப்படுகிறது. வெளியீட்டுப்பிரிவின் இணையதளமான www. Publicationdivision.nic.in மூலம் பாரத் கோஷ் நுழைவாயிலை நேரடியாக அணுகமுடியும்.

மின் நூலின் விலை ரூ.263/- அமேசான், கூகுள் பிளே புக்ஸ் விற்பனைத் தளங்களிலும் மின்நூல் கிடைக்கும்.